# 11-04-2023 செய்தி

## இந்திய-அமெரிக்க புள்ளியியலாளர் சி.ஆர்.ராவுக்கு 102 வயதில் சர்வதேச விருது



- புள்ளியியல் துறைக்கான நோபல் விருதாகக் கருதப்படும் சர்வதேச புள்ளியியல் விருதானது, 102 வயது இந்திய அமெரிக்கரான சி.ஆர்.ராவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
- புள்ளியியல் துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கியவர்களுக்கு 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை சர்வதேச புள்ளியியல் விருது வழங்கப்படுகிறது.
- 2017-ம் ஆண்டில் இருந்து அந்த விருது வழங்கப்பட்டு வருகிறது.
- 2023-ம் ஆண்டுக்கான விருதானது இந்திய-அமெரிக்க புள்ளியியலாளர் கலியம்புடி ராதா கிருஷ்ணராவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**சோஜிலா சுரங்கப்பாதை**

- ஸ்ரீநகர்-லே தேசிய நெடுஞ்சாலையில் (என்எச்-1) அமைக்கப்பட்டு வரும் 13 கிலோ மீட்டர் நீளம் கொண்ட சொஜிலா சுரங்கப்பாதை ஆசியாவிலேயே மிக பெரியதாகும்.
- 2026-ம் ஆண்டு இந்த சுரங்கப் பாதை பயன்பாட்டுக்கு வரும்.
- குளிர்காலத்தில் ஸ்ரீநகர்-லடாக் நெடுஞ்சாலை மூடப்படுவதால் ஜம்மு-காஷ்மீரில் உள்ள பொதுமக்கள் மற்றும் ராணுவத்தினர் கடும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

## ஆம் ஆத்மிக்கு தேசிய கட்சி அங்கீகாரம்

- திரிணமூல் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிகளின் தேசிய கட்சி அங்கீகாரம் ரத்து செய்யப்பட்டுள்ளது.
- ஆம் ஆத்மி கட்சிக்கு தேசிய கட்சி அங்கீகாரம் கிடைத்துள்ளது.

**தேசிய கட்சி**

- 4 மாநிலங்களின் சட்டப்பேரவைத் தேர்தலில் 6 சதவீத வாக்குகளைப் பெற்றிருக்க வேண்டும்.
- மக்களவை தேர்தலில் குறைந்தபட்சம் 3 மாநிலங்களில் 2 சதவீத இடங்களில் வெற்றி பெற்றிருக்க வேண்டும்.
- 4 மாநிலங்களில் பிராந்திய கட்சி அங்கீகாரத்தை பெற்றிருக்க வேண்டும்.
- இந்த 3 விதிகளில் குறைந்தபட்சம் ஒரு விதியை பூர்த்தி செய்யும் கட்சிக்கு தேசிய அங்கீகாரம் வழங்கப்படுகிறது.
- டெல்லி, பஞ்சாப், கோவா சட்டப்பேரவைத் தேர்தல்களில் ஆம் ஆத்மி கட்சி 6 சதவீதத்துக்கும் அதிக வாக்குகளை பெற்றிருந்தது.

## AAP

- குஜராத் சட்டப்பேரவைத் தேர்தலில் அக்கட்சி 13 சதவீத வாக்குகள் பெற்றது. இதைத் தொடர்ந்து ஆம் ஆத்மிக்கு தேசிய கட்சிக்கான அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- தேர்தல் ஆணைய பட்டியலின்படி தற்போது பாஜக, காங்கிரஸ் மார்க்சிஸ்ட், பகுஜன் சமாஜ், தேசிய மக்கள் கட்சி, ஆம் ஆத்மி தேசிய கட்சிகளாக உள்ளன.

## நீதித்துறை : அதிகரிக்கட்டும் பெண்களின் பிரதிநிதித்துவம்

- இந்திய நீதிமன்றக் கட்டமைப்பின் உயர் அடுக்குகளில் பெண் நீதிபதிகளின் பிரதிநிதித்துவம் குறைவாக இருப்பதை 'இந்திய நீதி அறிக்கை 2022' சுட்டிக்காட்டியிருக்கிறது.

**அறிக்கை**

- சமூக நீதிக்கான மையம், காமன்வெல்த் மனித உரிமைகள் முன்னெடுப்பு ஆகிய அமைப்புகளுடன் இணைந்து, நீதி வழங்கலில் இந்திய மாநிலங்களின் செயல்பாட்டை மதிப்பிடும் இந்திய நீதி அறிக்கையை (Indian Justice Report) டாடா அறக்கட்டளை 2019 முதல் ஒவ்வோர் ஆண்டும் வெளியிட்டு வருகிறது.
- 2022 நிலவரப்படி, இந்திய மாநிலங்களில் உள்ள மாவட்ட நீதிமன்றங்களில், பெண் நீதிபதிகளின் பிரதிநிதித்துவம் 35%; அதே நேரம், உயர் நீதிமன்றங்களில் 13% மட்டுமே என்று இந்த அறிக்கை தெரிவிக்கிறது.

**பெண் நீதிபதிகள்**

- மாவட்ட நீதிமன்றங்களைப் பொறுத்தவரை நாட்டிலேயே அதிகமாக (70%) கோவாவில் பெண் நீதிபதிகள் பணியாற்றுகின்றனர்.
- மேகாலயம், நாகலாந்து இரண்டு மாநிலங்களிலும் 63% பெண் நீதிபதிகள் பணியாற்றுகின்றனர்.
- 13 பெண் நீதிபதிகளுடன் நாட்டிலேயே அதிக பெண் நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்றம் என்னும் பெருமையைச் சென்னை உயர்நீதிமன்றம் தக்கவைத்துள்ளது.
- பிஹார், திரிபுரா, மணிப்பூர், மேகாலயம், உத்தரகாண்ட் ஆகிய மாநிலங்களின் உயர்நீதிமன்றங்களில் பெண் நீதிபதிகளே இல்லாத நிலை தொடர்கிறது.

## பேரவையில் நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு விதிகள்

**92(7) :**

- குடியரசுத் தலைர் அல்லது ஆளுநரைப் பற்றியோ அல்லது நீதிமன்றம் ஒன்றின் நடத்தைக்குக் களங்கம் கற்பிக்கும் வகையிலோ பேசக்கூடாது.
- விவாதத்துக்கு வலுசேர்க்கும் வகையில் ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவரின் பெயரைப் பயன்படுத்தக்கூடாது.

**287**

- பேரவை முன்னுள்ள குறிப்பிட்ட தீர்மானத்தைப் பொருத்தவரை, எந்த விதியையாவது நிறுத்தி வைக்க வேண்டும் என்று கோரும் தீர்மானம் ஒன்றை பேரவைத் தலைவரின் ஒப்புதலுடன் உறுப்பினர் எவரேனும் முன்மொழியலாம்.
- கூட்டத்துக்கு வந்திருந்து வாக்களிக்கும் மொத்த உறுப்பினர்களில் நான்கில் மூன்று பகுதியினரின் ஆதரவுடன் தீர்மானம் ஏற்றுக் கொள்ளப்பெற்றால் பிரச்சனைக்குரியதான அந்த விதி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் பெற வேண்டும்.
- எனினும் விதி 92(7)-ஐ நிறுத்தி வைப்பதற்கு இந்த விதியை பயன்படுத்தக்கூடாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



TNPSC
GROUP-I
முதல் நிலை தேர்வு பயிற்சி
SURESH' IAS ACADEMY
- Classes Taken by Expert
- Mock Test Conduct Regularly
- Daily Test Schedule Follow
- Printed Materials

| தூத்துக்குடி | திருநெல்வேலி | இராமநாதபுரம் | மதுரை | சென்னை |
|---|---|---|---|---|
| 162-A, எட்டையபுரம் ரோடு | 8A/1, இலந்தகுளம் ரோடு, பாளையங்கோட்டை | 82, புளிகாரத் தெரு, கண்ணன் கோவில் அருகில் | மாஸ்டர் மஹால் பின்புறம், முடக்குச்சாலை, காளவாசல் | 4, அண்ணா ஆர்ச் நேர் எதிரில், Skywalk அருகில். |
| 0461 - 4000970 | 0462 - 2560123 | 75503 52916 | 0452 - 2383777 | 044 47665919 |
| 99445 11344 | 98942 41422 | 75503 52917 | 98431 10566 | 97555 52003 |

உதயமாகிறது
கோவை